Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.106/2018

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பழனிச்சாமி | Occupation | விவசாயம் |
| Father's name | ஜெயராம் | Calling | |
| Village | வங்காருபட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of May 2026.

07.05.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது வங்காருபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. அசா.1 ஐ எனக்கு தெரியாது. தேதி, மாதம், வருடம், குறித்து எனக்கு நியாபகமில்லை. ஒரு நாள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அப்போது பத்திரம் எழுதும் ஒரு நபர் சாட்சி கையெழுத்து கேட்டார் அப்போது நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். அதுதவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றிட்ட கிரைய ஆவண எண்.364/2005 ல் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–

கடந்த 14.12.2005 அன்று காலை 11.00 மணியளவில் எனக்கு பழக்கமான வைத்தி என்பவர் கோரிக்கையின் பேரில் கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகம்

அருகில் வைத்து சந்தித்ததாகவும் அப்போது வைத்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.588/2013 ல் உள்ள இடத்தை கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரைய ஆவண எண்.364/2005 ன்படி கிரையம் செய்து கொடுத்ததாகவும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்ததாகவும் அதில் சங்கரையும், சேதுராஜ் பாண்டியும் கையெழுத்து செய்ததாகவும் மேற்படி கிரைய ஆவணத்தின் அண்ணாமலை என்பவர் வரைவு செய்ததாகவும் பின்னாளில் மேற்படி வைத்தியும் அவரது மனைவி சுலோச்சனாவும் சேர்ந்து அவர்களுக்கு பாத்தியமில்லாத இடத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துவிட்டதை அறிந்து கிருஷ்ணமூர்த்தி என்பவர் காவல்நிலையத்திலும் வருவாய் துறை அலுவலகத்திலும் இவ்வழக்கின் எதிரிகள் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.106/2018

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராஜேஷ் | Occupation | பத்திரஎழுத்தர் |
| Father's name | ராஜேந்திரன் | Calling | |
| Village | கலங்காபேரி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $07^{th}$ day of May 2026.

07.05.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது கலங்காபேரியில் குடியிருந்து வருகிறேன். நான் பத்திர எழுத்தராக வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 25 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது மாமா பழனி என்பவர் ஒரு பத்திரத்தை தட்டச்சு செய்வதற்காக அவரது அலுவலகத்தில் வைத்து என்னிடம் கொடுத்தார். அப்போது என்னையும் அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போடுமாறு கூறினார். அதனால் நானும் அதில் கையெழுத்து செய்துகொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

கடந்த 05.12.2021 அன்று காலை 11.00 மணியளவில் எனக்கு நன்கு தெரிந்த வைத்தி என்பவரை கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சந்தித்ததாகவும் சென்னை அண்ணா நகரில் வசித்து வரும் ஜெகந்நாதன் என்பவருக்கு பாத்தியப்பட்ட திருவில்லிபுத்தூர் தாலுகா புல எண்.588/2013 ல் உள்ள பட்டா எண்.601 ல் உள்ள இடத்தை விற்பனை செய்வதற்காக மேற்படி வைத்தி என்பவருக்கு கொடுக்கப்பட்ட General Power of Attorney பத்திரத்தை மூலமாக வைத்து வைத்தியின் மனைவி சுலோச்சனாவிற்கு மேற்படி இடத்தை கிரையமாக கொக்க பத்திரம் தயார்செய்யப்பட்டதாகவும் அதில் நானும் சுப்புராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் மேற்படி ஆவண எண்.3193/2001 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும் மேற்படி கிரைய பத்திரத்தில் ஜெகந்நாதனுக்கு பாத்தியப்பட்ட 241 சதுரமீட்டர் அளவிலான நிலத்திற்கு பதிலாக சுமார் 6480 சதுர அடி என்று திட்டமிட்டு வைத்தி மோசடியாக தயார் செய்துள்ளதாகவும் மேற்படி இடத்தை வைத்தி 2013ம் ஆண்டு பட்டா மாற்றி சேதுராம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு நம்பிக்கைமோசடி செய்து கிரையமாக எழுதிகொடுத்துவிட்டதாகவும் அதுசம்மந்தமாக அவர்கள் வருவாய் துறை மற்றும் காவல்நிலையத்தில் இவ்வழக்கின் எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளது பற்றி தெரிந்துகொண்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.